

தருமபுரி மாவட்ட கழக மூத்த முன்னோடி,முன்னாள் தருமபுரி கிருஷ்ணகிரி ஒருங்கிணைந்த மாவட்டக் கழகச் செயலாளர்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.சின்னசாமி அவர்கள் உடல் நலக்குறைவால் தருமபுரியில் உள்ள அவரது இல்லத்தில் காலமானார்.அன்னாரது மறைவு செய்தி அறிந்து பொதுபணித்துறை அமைச்சரும், மண்டல பொறுப்பாளருமான எ.வ.வேலு அவரது இல்லத்திற்கு நேரில் சென்று அவருக்கு அஞ்சலி செலுத்தி அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி எம்.பி,மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன், முன்னாள் மாவட்டச் செயலாளர்கள் தடங்கம்.சுப்ரமணி, பி.என்.பி.இன்பசேகரன், தருமச்செல்வன், நகர செயலாளர் நாட்டான், மாது மற்றும் தி.மு.க.வினர் உள்ளனர்.



மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை ராஜன் தோட்டம் சாய் விளையாட்டு மைதானத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில் மாவட்ட அளவில் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் பார்வையிட்டு, ஓட்டபந்தயம் இறுதி போட்டியை கொடி அசைத்து தொடங்கி வைத்தார். உடன் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் எஸ்.ஸ்ரீகாந்த், மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இராம. இளங்கோவன், ஜி.என்.ரவி, மற்றும் ஒன்றிய, நகர கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் உள்ளனர்.




திருப்பூர் மாவட்டம், அன்னூரில் உள்ள தி.மு.கழக பொறியாளர் அணி மேற்கு மண்டல அலுவலகத்தில் பொறியாளர் அணி துணைச் செயலாளர், கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் அம்பாள் எஸ்.ஏ.நந்தகுமார் ஏற்பாட்டில் ரூபாய் 5 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் நூலகத்தை மேற்கு மண்டலப் பொறுப்பாளர், கரூர் சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி திறந்து வைத்தார். இதில் திருப்பூர் வடக்கு மாவட்ட பொறுப்பாளர், திருப்பூர் மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், எஸ்.கே.பி கருணா, துரை. கி.சரவணன், கு.சண்முகசுந்தரம், வே.உமாகாந்த், இரா.நரேந்திரன், சி.பிரதீப், இரா.ப.பரமேசுகுமார், ஆர்.வி.எல். இரவிச்சந்திரன், கலை கார்த்திகேயன், வெற்றி ஞானசேகரன், பி.அன்பழகன், எம்.பி.ராஜவர்மன், நா.பாபு உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### நடுகுத்தகை கே.சுரேஷ்குமார் ஏற்பாட்டில் திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞரணி சார்பில்

# பூவிருந்தவல்லி தொகுதி பாக இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சிக் கூட்டம்!

## அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் சிறப்புரையாற்றினார்!

திருவள்ளூர், செப்.2

திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞர் அணி சார்பில் பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதி பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி கூட்டம் வேப்பம்பட்டு பகுதியில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே. சுரேஷ்குமார் ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் ஒன்றிய கழகச் செயலாளர் சே.பிரேம் ஆனந்த் வரவேற்புரையற்றினார் மாநில இளைஞரணி செயலாளர்கள் பா.அப்துல் மாலிக், பிரபு கஜேந்திரன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, வி.ஜெ.உமா மகேஸ்வரன், அக்னி ராஜேஷ், டி.பிரியாகுமார், எஸ்.சதீஷ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள் இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளர் சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் மாநில ஆதிதிராவிடர் நலகுழு அணி செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்

தலைமைக் கழக செய்தி தொடர்புக்கு துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, சமூக வலைத்தளம் தன்னார்வாலர் விக்னேஷ் ஆனந்த், கலந்து கொண்டு பாக இளைஞர்களுக்கு சமூகவலைதளப்பயிற்சி குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்

நிகழ்ச்சியில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பேசுகையில்

தி.மு.க. வலுவான கொள்கை ரீதியான கட்சி. இங்கு உண்மையாக உழைப்பவர்களுக்கு மட்டுமே அங்கீகாரம் கிடைக்கும். பணம், ஜாதி பெயரால் இங்கு வளர்ந்து விட முடியாது. இளைஞரணியில் புதிதாக பொறுப்புகளுக்கு வந்துள்ளவர்கள் அமைப்பு ரீதியாக உழைத்து உயர் பொறுப்புகளுக்கு வர வேண்டும். சமூக வலைதளங்களை மையமாக வைத்து சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ள நிலையில் திமுக இளைஞரணி நிர்வாகிகள் முழுமையாக சமூக வலைதள பக்கங்களை பயன்படுத்தி திமுக அரசின் சாதனைகள் அனைவருக்கும் சென்றடையும் வகையில் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இளைஞரணி என்பது கழகம் தோன்றிய காலத்தில் இருந்தே கொள்கையோடு வளர்த்த ஒரு கட்சி என்றால் அது திராவிட முன்னேற்ற கழகம் மட்டும் தான் எனவும், அன்று முதல் இன்று வரை இளைஞரணி என்பது மிகவும் வலிமையாக உள்ளது

இளைஞரணியினர் கழகத்திற்காக அயராது உழைத்தால் மட்டுமே உயர்ந்த நிலைக்கு வர முடியும் என பல்வேறு கருத்துக்களை தெரிவித்து பேசினார்.

இந்நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாவட்ட நிர்வாகிகள் எஸ். ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதரன், பா.நரேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி. விமல் வர்ஷன், வி.குமார், ஜெ. மகாதேவன், மாநகர ஒன்றிய நகர செயலாளர்கள் சன்.பிரகாஷ், டி.தேசிங்கு, ப.ச.கமலேஷ், ஜி.ஆர்.திருமலை, முரளிகிருஷ்ணன், மாநகர மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ஜி. துர்கா பிரசாத், வி.தியாகராஜன், ஆர்.பிரவீன் குமார் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் இள.ஸ்ரீதர், ஜி.சதீஷ்குமார், மகா புவனேஷ், ரங்கநாதன் மகேஷ், ஒன்றிய நகர பேரூர் அணிகளின் அமைப்பாளர்கள் முகமது ராஷிக் ஹனீப், க.பரிமலேழன், ஆர்.பிரவீன் குமார், தி. சதீஷ், ரா.ராஜ், சஞ்சய் திருமலை, என்.சரத்குமார், சு.கங்காதரன், மற்றும் ஒன்றிய நகர பேரூர் பகுதி கழக இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர் கூட்டம் முடிவில் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் கசுவ ஆர்.ராஜ் நன்றி கூறினார்.

# தி.மு.க. இளைஞர் அணி

## சென்னை தெற்கு மாவட்டம் பகுதி துணை அமைப்பாளர் நியமனம்

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் கிழக்குப் பகுதியில் புதிய துணை அமைப்பாளராக **அ.அப்துல் ரகீம், 3/205–டி, பிஸ்மில்லா நகர் 2–வது தெரு, வெட்டுவாங்கேணி, சென்னை–115** நியமிக்கப்படுகிறார். ஏற்கனவே நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து கழகப் பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**அன்பகம்**
தேனாம்பேட்டை, சென்னை-18.
நாள் : 31-08-2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ தலைமையில் – சென்னை தென்மேற்கு மாவட்ட

## விளையாட்டு மேம்பாட்டு அணியின் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்ட அமைப்பாளர் சிஐடி நகர் ஆர்.குமரன் அறிவிப்பு!

சென்னை,செப்.2-

சென்னை தென்மேற்கு மாவட்ட அமைப்பாளர் சி.ஐ.டி. நகர் ஆர்.குமரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தென் மேற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணியின் ஆலோசனைக் கூட்டம் இன்று (02-09-2025 செவ்வாய்க்கிழமை) மாலை 6.30 மணி அளவில் சி.பி.ராமசாமி சாலையில் அமைந்துள்ள சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ தலைமையில் தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ பகுதி செயலாளர்கள் கே.ஏழுமலை எம்.சி, நந்தனம் கி.மதி எம்.சி, எஸ். முரளி, ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது இந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு சென்னை தென் மேற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள் மற்றும் பகுதி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட அமைப்பாளர் சி.ஐ.டி. நகர் ஆர்.குமரன் தெரிவித்துள்ளார்.



முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, ஈரோடு மாவட்டம் அந்தியூர் சட்டமன்றத் தொகுதி அந்தியூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற 'நலம் காக்கும் ஸ்டாலின்' சிறப்பு மருத்துவ முகாமை அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் அந்தியூர் ஏ.ஜி.வெங்கடாசலம் துவக்கி வைத்து ஆய்வு மேற்கொண்டு நல உதவிகள் வழங்கினார். நிகழ்வில் ஈரோடு மாவட்ட சுகாதார அலுவலர் அருணா, அந்தியூர் பேரூராட்சி மன்ற தலைவர் எம்.பாண்டியம்மாள், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் பழனிச்சாமி, வட்டார மருத்துவ அலுவலர் சக்தி கிருஷ்ணன், மின்சார வாரிய அந்தியூர் உப கோட்ட உதவி செயற் பொறியாளர் அங்கப்பன், போக்குவரத்து காவல்துறை ஆய்வாளர் கஸ்தூரி, உதவி ஆய்வாளர் மெய்யழகன் உள்ளிட்ட பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

### கொளத்தூரில் கபாலீசுவரர் கல்லூரி மற்றும்

# மூத்த குடிமக்கள் உறைவிட கட்டுமானப் பணிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் ஆய்வு செய்தார்!

சென்னை, செப். 2 -

தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.கே. சேகர்பாபு அவர்கள் நேறு முன்தினம் (31.08.2025) சென்னை கொளத்தூர், பூம்புகார் நகரில் கட்டப்பட்டு வரும் அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் புதிய கட்டடம், இராஜாஜி நகரில் கட்டப்பட்டு வரும் மூத்த குடிமக்கள் உறைவிடம் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகளையும், சூளை, அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில் குடமுழுக்கு முன்னேற்பாடு பணிகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, கட்டுமானப் பணிகளை விரைந்து முடித்திடவும், குடமுழுக்கிற்கு வருகை தரும் பக்தர்கள் எளிதாகவும், விரைவாகவும் தரிசனம் மேற்கொள்ளும் வகையில் உரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளவும் அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

பின்னர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

மறைந்த முதலமைச்சர்கள் காமராஜர், பக்தவத்சலம், முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரது ஆட்சி காலம் மற்றும் அதிமுக ஆட்சி காலத்தில் திருக்கோயில்கள் சார்பில் பள்ளி மற்றும் கல்லூரிகள் உருவாக்கப்பட்டு நடத்தப்படுவது வரலாறாகும். அந்த வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின், மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில் சார்பில் சைவ சித்தாந்த வகுப்புகளோடு கொளத்தூரில் கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டு நான்காண்டுகளுக்கு மேலாக எவர்வின் பள்ளி வளாகத்தில் நடத்தப்பட்டு வருகிறது.

இந்தக் கல்லூரிக்கு என்று புதிதாக கட்டடம் கட்டுவதற்கு சோமநாத சுவாமி திருக்கோவிலுக்கு சொந்தமான இடம் மற்றும் சென்னை மாவட்ட ஆட்சியர் கட்டுப்பாட்டில் இருந்த அனாதீன இடம் என 5.96 ஏக்கர் நிலப்பரப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏழை, எளிய பிற்படுத்தப்பட்ட மாணவச் செல்வங்கள் உயர்கல்வி பயிலும் வகையில் ரூ.25 கோடி மதிப்பீட்டில் 22 வகுப்பறைகள், ஆய்வகங்கள், நூலகம், கல்லூரி முதல்வர் மற்றும் ஆசிரியர்கள் அறை, முதல்வரின் படைப்பகம், உணவகம், வாகனம் நிறுத்துமிடம் போன்ற வசதிகளுடன் அமைக்கப்பட்டு வருகிறது. இப்பணிகள் வரும் டிசம்பர் மாதத்திற்குள் முடிக்கப்பட்டு, மாணவர்களின் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்படும்.

முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின் படி, கொளத்தூர் ராஜாஜி நகரில் ரூ.8.88 கோடி மதிப்பீட்டில் மூத்த குடிமக்கள் உறைவிடம் கட்டப்பட்டு வருகிறது. இங்கு 60 வயதிற்கு மேற்பட்ட, குடும்பத்தில் பராமரிக்க வசதி வாய்ப்பில்லாத 100 மூத்த குடிமக்கள் தங்கிடும் வகையில் அறைகள், சமையலறை மற்றும் உணவு கூடம், பார்வையாளர்களை அவசர ஊர்தியுடன் மருத்துவ மையம், நடைபாதையுடன் கூடிய சிறு பூங்கா, யோகா மற்றும் தியான அறை போன்ற வசதியுடன் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த மூத்த குடிமக்கள் உறைவிடமும் வரும் டிசம்பர் மாதத்திற்குள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். இந்த உறைவிடத்திற்கான தொடர் செலவினத்திற்காக செல்வந்தர்கள் மற்றும் நிறுவனங்களின் சி.எஸ்,ஆர் நிதி வரவேற்கப்பட்டதில், இது வரை ரூ. 5 கோடி வரப் பெற்றுள்ளது. இதனை வைப்பு நிதியாக வைத்து, அதன் மூலம் கிடைக்கப் பெறும் வட்டித் தொகையில் மூத்த குடிமக்கள் உறைவிடம் தொடர்ந்து பராமரிக்கப்படும்.

சுமார் நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த சூளை அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயிலுக்கு 2009 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது இத்திருக்கோயிலுக்கு தற்போது ரூ. 3 கோடி மதிப்பீட்டில் இராஜ கோபுரம் மற்றும் அனைத்து சன்னதிகள் புதுப்பித்தல், தங்க விமானம், புதிய கொடிமரம், பக்தர்கள் தங்குமிடம் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வருகின்ற செப்டம்பர் மாதம் 4 ஆம் தேதி நடைபெற உள்ள குடமுழுக்கு பெருவிழாவின் போது பக்தர்கள் எளிதாகவும் விரைவாகவும் தரிசனம் மேற்கொள்ளும் வகையிலும், அவர்களுக்கு குடிநீர் உணவு மற்றும் பிரசாத பைகள் வழங்கிடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மக்களிடம் எழுந்துள்ள எதிர்ப்பு காரணமாக விரைவில் தமிழகத்தில் மாற்றம் வரும் என்று ஒன்றிய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்கள் தெரிவித்துள்ளாரே என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு, நாடாளுமன்றத் தேர்தலில் பாஜக 400 இடங்களுக்கு மேல் வெற்றி பெறுவோம் என்று சொன்னதை இந்தியா கூட்டணி முறியடித்து இழுபறி நிலையில் ஆட்சி அமைத்ததே பெரிய மாற்றமாகும். மேலும் தற்போது பாஜகவுக்கு இருக்கின்ற 4 சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்தாலும் 2026 சட்டமன்றத் தேர்தலில் ஒருவர் கூட சட்டமன்றத்திற்கு நுழைய முடியாத நிலை ஏற்படும். இதுவே அந்த மாற்றமாகும் என்று தெரிவித்தார்.



மண்டல அளவிலான கலந்துரையாடல் கூட்டம் காணொலி காட்சி வாயிலாக கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஒய்.பிரகாஷ் கலந்துகொண்டு உரையாற்றினார். கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர் புஷ்பா சர்வேஷ், மாவட்டப் பொருளாளர் சுகுமாரன், துணை மேயர் ஆனந்தய்யா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் எல்லோரா மணி, பொதுக்குழு உறுப்பினர் தனலட்சுமி, ஓசூர் தொகுதி பொறுப்பாளர் வடிவேல், மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைச் செயலாளர் மாதேஷ்வரன், ஒன்றிய செயலாளர்கள் கஜேந்திர மூர்த்தி உள்ளிட்ட ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.



தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் அருகே கள்ளப்புலியூர் மணஞ்சேரி மேல தெருவைச் சேர்ந்தவர் அருமை துரை. இவரது கூரை வீட்டில் மின் கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டு பொருட்கள் அனைத்தும் சேதம் அடைந்தது. இதுபற்றி தகவல் அறிந்த தஞ்சை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தீ விபத்தால் பாதிக்கப்பட்ட அருமை துரைக்கு ரூ. 8000 , 5 கிலோ அரிசி,வேஷ்டி புடவை உள்ளிட்டவை வழங்கி ஆறுதல் கூறினார். இதில் உதவி ஆட்சியர் ஹிருத்யா விஜயன், தாசில்தார் சண்முகம் வருவாய் ஆய்வாளர் சாமிநாதன், விஏஓ சுரேந்திரன் மற்றும் தி.மு.க. கிழக்கு ஒன்றியச் செயலாளர் ஜெ.சுதாகர் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.